**தூதுவர் ஜூலீ ஜே. சங் அவர்கள்**
**இலங்கையின் இளம் தொழில்முனைவோர் சபையில் தெரிவித்த கருத்துக்கள்**
**24ஆவது ஆண்டு விழா**
**மார்ச் 10, 2023**
**ஷங்ரி லா நடனக்கூடம்**

வணக்கம், அஸ்ஸலாம் அலைக்கும், ஆயுபோவன், மாலை வணக்கம்.

தனது பதவிக்காலத்தை நிறைவு செய்யும் COYLE தலைவர் திமுத் சன்கம சில்வா, தனது பதவிக்காலத்தை ஆரம்பிக்கும் COYLE தலைவர் ரசித் விக்கிரமசிங்க, கௌரவ பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்கள், மாண்புடையீர் மற்றும் நண்பர்கள், அனைவருக்கும் மாலை வணக்கம்.

இன்றிரவு உங்களுடன் இணைந்து கொள்வதற்கு என்னை அழைத்தமைக்கு நன்றி. COYLE இன் உறவுகளை கட்டியெழுப்பும் மற்றும் இலங்கை முழுவதும் வணிக அபிவிருத்திக்கு உதவிசெய்யும் 24 வருட சேவையினைக் கொண்டாடும் இந்நிகழ்வில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையின் சுதந்திரம் மற்றும் மக்கள், முன்னேற்றம் மற்றும் பங்காண்மை ஆகிய கருப்பொருள்களின் மீது கவனம் செலுத்தி, அமெரிக்காவுடனான இருதரப்பு உறவுகளை தாபித்தமை ஆகியவற்றின் 75 ஆண்டு நிறைவினைக் குறிப்பதனால் 2023 ஆம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டாகும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து இன்னும் அதிக மீள்தன்மையுடனும் இன்னும் அதிக வலுவுடனும் மீள்வதற்கு நீங்கள் பாடுபடும் இத்தருணத்தில், உங்கள் நாடு ஒரு முக்கியமான திருப்புமுனையில் நிற்கிறது. நீண்ட கால பொருளாதார ஆரோக்கியத்தை கட்டமைப்பதில் தொழில்முனைவோர் மிகமுக்கிய பங்கினை வகிக்கிறார்கள் என்பது என்னை விட உங்களுக்கு நன்கு தெரியும்.

தனது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் இலங்கைக்கு உதவிசெய்வதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் பொதியைப் பெற்றுக் கொள்வதற்காக கடன் பேண்தகுநிலையினை நிலைநிறுத்துவதற்கு தேவையான உறுதியான மற்றும் நம்பகமான நிதியளிப்பு உத்தரவாதங்களை வழங்குவதில் பரிஸ் கிளப், இந்தியா மற்றும் பிறநாடுகளுடன் இணைந்து கொள்வதற்கு சீனா முடிவெடுத்துள்ளது என்ற செய்தியை உங்களனைவரையும் போலவே நானும் வரவேற்றேன். அது ஒரு நல்ல நடவடிக்கை, ஏனெனில் இலங்கை அதன் பொருளாதாரத்தை ஒழுங்காக்க வேண்டுமென நாம் அனைவரும் விரும்புகிறோம். எனினும் அது கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளை உண்மையிலேயே மேற்கொள்ளல் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுதல் போன்றவற்றிற்கான சீர்திருத்தங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துதல் உட்பட, எமக்கு முன்னாலுள்ள சவாலான பணியின் ஒரு ஆரம்பம் மட்டுமே. இது ஒரு சிரமமான விடயம் மட்டுமன்றி உடனடியாக ஒரே இரவில் செய்யக் கூடிய விடயமுமல்ல. எனினும் அந்தப்பணியானது உங்களைப் போன்ற தொழில்முனைவோர் முழுமையாக செழித்து வளரக்கூடிய, நீடித்த செழிப்பிற்கு பங்களிப்புச்செய்யக்கூடிய ஒரு பொருளாதாரச் சூழலை பேணிவளர்ப்பதற்கு உதவும்.

கடந்த மாதம் நீங்கள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கு விருந்தளித்த போது, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவிசெய்வதில் உலகளாவிய சமூகத்தினரிடையேயான சர்வதேச

ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். அமெரிக்காவானது அதையே செய்தது மற்றும் எதிர்காலத்திலும் அதைச் செய்யும்: கடந்த ஜூன் மாதம் முதல் உரம், விதைகள், பாடசாலை மதிய உணவு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் SME களுக்கான நிதியளிப்புகள் என 270 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான புதிய உதவிகளை வழங்குதல்; IMFஇன் மிகப்பெரிய பங்குதாரர் எனும் வகையில் அதன் கடன்வழங்கும் செயன்முறையில் உங்களுக்கு உதவி செய்தல்; உங்களது சட்டக் கட்டமைப்புகள், கணக்கியல் நடைமுறைகள் மற்றும் அரச நிதி முகாமைத்துவ அமைப்புகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான தொழிநுட்ப உதவிகளை வழங்குதல் என்பன அவற்றுள் அடங்கும். உங்களது மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாகவும் நாங்கள் இருப்பதுடன், உங்களது வளர்ச்சிக்கான இயந்திரத்தின் ஒரு பகுதியாகவும் இருக்க விரும்புகிறோம். வரி செலுத்துவோர் மீதான சுமையைக் குறைப்பதற்காக அரசதுறையினை மறுசீரமைப்பதற்கும், மிகவும் சமத்துவமாக இருக்கும் வகையில் வரிச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் முன்னுரிமை அளிக்குமாறு அரசாங்கத்தை COYLE பகிரங்கமாக வலியுறுத்தியதை நான் அறிவேன். அதற்காக உங்களை நான் பாராட்டுகிறேன். தொடர்ந்து குரல்கொடுங்கள்.

COYLE உறுப்பினர்கள் எனும் வகையில் நீங்களனைவரும் ஆற்றுவதற்கு இது போன்ற ஒரு முக்கியமான பங்கு உள்ளது என்பதையும், மாற்றத்திற்கு அழைப்பு விடுப்பதற்கான ஒரு முக்கியமான தளம் உங்களுக்கு உள்ளது என்பதையும் நீங்கள் அனைவரும் முழுமையாகப் புரிந்துகொள்வீர்கள் என நான் நம்புகிறேன். அண்மைக்காலம் முதல் இடைக்காலம் வரையான காலத்திற்கு பொருளாதாரம் வளர்வதற்கு உதவுவது மட்டுமன்றி, நீண்ட கால பொருளாதார ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் அமைப்புரீதியான மாற்றங்களுக்காகவும் நீங்கள் வாதிடலாம். உண்மையில் போட்டியிட்டு உங்கள் பொருளாதாரத்தை வளர்ப்பதற்காக பல தசாப்தகால பாதுகாப்புவாத போக்குகளிலிருந்து நீங்கள் விலகிச் செல்லலாம். பல வருடங்களாக, உலக வங்கியின் Ease of Doing Business Survey போன்ற உள்ளக தரவரிசைகளில் இலங்கை படிப்படியாக கீழிறங்கி வருகிறது. அதிகம் வெளிப்படையான, வினைத்திறனான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த ஒரு வணிகச் சூழலுக்குத் தேவையான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் இந்தப் போக்கினைச் சரிசெய்வதற்கான ஒரு சிறந்த நிலையில் நீங்கள் உள்ளீர்கள்.

COYLE ஆனது அனைத்து இலங்கை பிரஜைகளின் புத்தாக்கம் மற்றும் திறமைகளுக்கான ஒரு உந்து பலகையாகவும் சேவையாற்ற முடியும். தொழில்முனைவோர் எனும் வகையில், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பெருநிறுவன கலாச்சாரத்தை அமைக்கும் திறனையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். உங்களது நாளாந்த பணிகள் ஊடாகவும், உங்கள் நிறுவனங்களின் தொண்டு முயற்சிகள் ஊடாகவும், வளர்ந்து வரும் வணிகத் தலைவர்களுக்கு வழிகாட்டுவதன் ஊடாகவும், அனைவருக்கும் நியாயமான முறையில் செயற்படும் வெளிப்படையான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான உங்கள் அர்ப்பணிப்பின் ஊடாகவும் நீங்கள் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

தற்போது, சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் இவ்வாரத்தில் நான் ஆண்களுக்கு மட்டுமேயான ஒரு அமைப்பில் உரையாற்றுகிறேன் எனும் நகைமுரண் எனக்கு மறக்கவில்லை. நான் உங்களது இணையத்தளத்தைப் பார்த்தேன்- இலங்கையில் உள்ள நூற்றுக்கணக்கான நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வெள்ளை ஆடை அணிந்த ஆண்களை மட்டுமே அது கொண்டிருந்தது. “120 கட்டுப்படுத்தும் பங்குதாரர்கள் மற்றும் தலைவர்கள் ஒன்றாக அமர்ந்து வாதிடுவதை” உங்களது வலைத்தளம் காட்டுகிறது. Dell, Microsoft, Apple, Xerox போன்ற பல அமெரிக்க நிறுவனங்கள் உட்பட அது பிரதிநிதித்துவப்படுத்தும் வணிகக்குறிகள்

கவர்ச்சிகரமானவை. "தேசிய முக்கியத்துவத்திற்கு இன்றியமையாத ஒரு பங்கினை ஆற்றும் மிகவும் செல்வாக்கு மிக்க மற்றும் துடிப்பான இலங்கையின் இளம் வணிகத் தலைவர்களின் சபையாக இருப்பதற்கு பிரயத்தனம் செய்வதாக" உங்களது தொலைநோக்கு அறிக்கைகள் கூறுகின்றன. பெண்கள் இல்லாமல் இதை நீங்கள் எப்படி செய்யப் போகிறீர்கள்? சிங்கள, தமிழ், முஸ்லிம் வர்த்தகத் திறமைகளின் முழுமையான பன்முகத்தன்மை இல்லாமல் இதை எப்படிச் செய்யப் போகிறீர்கள்? என நான் உங்களிடம் கேட்கிறேன். இலங்கை முக்கியமான சீர்திருத்த முயற்சிகளை மேற்கொள்கையில், பெண்களின் பொருளாதார வலுவூட்டலை விரிவுபடுத்துவதும், அவர்களது இலாபம் ஈட்டும் ஆற்றல்கள் மற்றும் திறன்களைப் பயன்படுத்திக் கொள்வதும் ஒரு மிகமுக்கியமான படியாகும். நான் குறிப்பிட்டது போல், இலங்கை சுதந்திரம் பெற்று அமெரிக்காவுடன் ஒரு நீண்ட மற்றும் முக்கியமான பங்காண்மையினை ஆரம்பித்தது 75 ஆண்டுகளுக்கு முன்னராகும். உயர்தரத்திலான கல்வியினைப் பெற்றுள்ளபோதும் இலங்கையின் தொழிலாளர் படையில் மூன்றில் ஒரு பங்கை மட்டுமே பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் மற்றும் வெளிப்படையாகவே, நாடு இன்னும் சிறப்பாகச் செயற்பட வேண்டும். உண்மை என்னவென்றால், தொழிலாளர் சக்தியில் உள்ள பரந்த பாலின இடைவெளியானது பெண்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் அவர்களின் சமூகங்களை மட்டுமன்றி, அது ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் - உங்கள் நிறுவனங்களையும் ஏமாற்றும் ஒரு விடயமாகும்.

நிறுவனங்கள் பெண்களை பணியமர்த்தத் தவறும்போது – அனைத்து தரங்களிலும் சிறந்த மற்றும் பிரகாசமான சில பணியாளர்களை நீங்கள் இழக்கிறீர்கள். நான் சொல்வதை அவ்வாறே நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை; பலவீனமான பொருளாதார வளர்ச்சிக்கும் தொழிலாளர் படையில் நிலவும் பரந்த பாலின இடைவெளிகளுக்கும் இடையே ஒரு வலுவான தொடர்பு இருப்பதை பல ஆய்வுகள் காட்டுகின்றன. இன்னும் விரிவாகக் கூறுவதாயின், இது இலங்கைப் பொருளாதாரத்தின் சாத்தியக்கூறுகளை மிகக்கடுமையாக மட்டுப்படுத்துகிறது. எவ்வாறாயினும், இலங்கைப் பெண்கள் கைத்தொழிற்துறைகளில் முழுவதிலும் தீவிரமாக பங்குபற்றுவதால், சில பாரிய முன்னேற்றங்களை நாங்கள் கண்ணுற்றோம். உங்களின் முக்கியமான பணியில் உங்களுடன் இணைந்துகொள்ள பெண் தொழில்முனைவோரையும் அழைப்பதன் மூலம், அனைவரையும் உள்ளடக்குதல் எனும் விடயத்தில் ஒரு தரநிலையைத் தாங்கி நிற்கும் அமைப்பாகத் திகழுமாறு COYLEஇனை நான் ஊக்குவிக்கிறேன். உங்களிடம் ஒரு மகளிர் பீடம் புத்துயிர் பெற்று வருகிறது என்பதை நான் அறிவேன்; தொண்டு வேலை செய்யும் உறுப்பினர்களின் வாழ்க்கைத் துணைகளைக் கொண்டிருப்பதற்கு அப்பால் செல்வதற்கு அதை அனுமதியுங்கள், அது நிச்சயமாக மிகவும் பாராட்டத்தக்கது, ஆனால் ஒரு தொழில்வாண்மை வலையமைப்பை உருவாக்கும் முழு அளவிலான உறுப்பினர்களாகவும் மாறலாம். பெண்களின் பொருளாதார பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம், இலங்கை தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை கணிசமாக அதிகரிக்க முடியும் என்பதை மறந்துவிட வேண்டாம். தொழிலாளர் படையில் பெண்களின் பங்கேற்பினை 10 சதவிகிதம் அதிகரிப்பதானது அனைவரதும் உண்மையான ஊதியத்தை 5 சதவிகிதம் அதிகரிக்கிறது என ஒரு ஆய்வு கண்டறிந்துள்ளது. பாலின இடைவெளியைக் குறைப்பதானது உலகின் ஒட்டுமொத்த GDPஇனை கருதத்தக்க அளவு அதிகரிக்கும்.

இது கோட்பாடு அல்லது நம்பிக்கை அல்லது எம்மை நன்றாக உணர வைக்கும் ஒரு விடயமல்ல. இது உண்மையான தரவு மற்றும் அடிமட்ட இலாபத்தை அடிப்படையாகக் கொண்டது. அமெரிக்காவில் பெறப்பட்ட இரண்டு தரவுகளை உங்களுக்கு நான் கூறுகிறேன்: தலைமைப் பாத்திரங்களில் அதிகமான பெண்களைக் கொண்ட நிறுவனங்கள் அதிக இலாபம் ஈட்டுகின்றன.

பெண்களை உயர் பதவிகளுக்கு உயர்த்துவதில் சிறந்த சாதனையினைக் கொண்ட இருபத்தைந்து Fortune 500 நிறுவனங்கள் தமது தொழிற்துறையில் உள்ள சராசரி நிறுவனங்களை விட 18 முதல் 69 சதவீதம் அதிக லாபம் ஈட்டுவதாக பெப்பர்டைன் பல்கலைக்கழக ஆய்வொன்று காட்டியது. இரண்டாவதாக, ஒரு பெண் தலைமையிலான 13 Fortune 500 நிறுவனங்களின் பங்குகள் S&P 500 நிறுவனங்களின் பங்குகளைவிட (முதன்மையாக ஆண்களால் வழிநடத்தப்படும் நிறுவனங்கள்) 25% அதிக இலாபமீட்டின. பொருளாதார வாய்ப்புகளுக்கான பெண்களின் அணுகலை அதிகரிப்பதன் மூலம் அமெரிக்காவானது இவ்வகையான உண்மையான நன்மைகளை அனுபவித்துள்ளது. வெளிக்கள தொடர்பாடல், வழிகாட்டல் மற்றும் எதிர்காலத்தில், COYLE இல் முழுமையான அங்கத்துவம் மற்றும் தலைமைப் பாத்திரங்களை வழங்குதல் உட்பட பெண் தொழில்முனைவோருக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு உறுதிபூணுமாறு இப்போது, இன்று மாலை, மகளிர் வரலாற்று மாதத்தின் போது உங்களிடம் நான் வேண்டுகிறேன்.

கடந்த 24 ஆண்டுகளில் நீங்கள் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளதுடன் உங்களது எதிர்கால நடவடிக்கைகளில் அனைவரையும் உள்ளடக்கிய, முன்னோக்கிய ஒரு அணுகுமுறையினைக் கடைப்பிடிப்பதானது உங்களுக்கு நன்கு பயனளிக்கும். நான் உங்களைப் பாராட்டுவதுடன் ஒரு செழிப்பான இலங்கையை கட்டியெழுப்புவதற்கான உங்களது முயற்சிகளில் நீங்கள் தொடர்ந்து வெற்றிபெற வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன். பல்வேறு இனங்கள், மதங்கள் மற்றும் பொருளாதாரப் பின்னணிகளைக் கொண்ட மக்களின் படைப்பாற்றல், புத்திக் கூர்மை மற்றும் இலங்கையிலுள்ள ஆண் பெண்களின் பன்முகத்தன்மை என்பன உங்களுக்குத் தேவையாகும். நீங்கள் எப்பொழுதும் செயலாற்றியதைப் போலவே தொடர்ந்தும் செயலாற்றலாம். அல்லது நெறிமுறைகளைச் சவாலுக்குட்படுத்தலாம், போட்டியிடலாம் மற்றும் அவற்றைப் புதுமைப்படுத்தலாம்.

இன்றிரவு, COYLE தலைவர்களின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தலைமுறையினர் முக்கியமான பணிகளைச் செய்வதைப் பார்க்க விரும்புவதாக தனது பதவிக்காலத்தை ஆரம்பிக்கும் தலைவர் கூறினார். மகன்கள் மற்றும் பேரன்களை மட்டுமன்றி, உங்களது மகள்கள் மற்றும் பேத்திகளையும் அவர் குறிப்பிட்டார் என நான் நம்புகிறேன். “பரிணாமம்: மீள்தன்மை, சுறுசுறுப்பு மற்றும் மாற்றம்” எனும் இந்த ஆண்டின் உங்களது தொனிப்பொருளை எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன். பரிணாமம் என்றால் மாற்றம்.

நீங்கள் மாற்றத்தை எதிர்க்கலாம் அல்லது அதை ஏற்றுக்கொள்ளலாம். நீங்கள் விரும்புவதுபோன்று உண்மையிலேயே “மிகவும் செல்வாக்கு மிக்க மற்றும் துடிப்பான இளம் வணிகத் தலைவர்களின் சபையாக” மாறலாம். அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரு வலுவான மற்றும் உறுதியான நண்பராகவும் பங்காளராகவும் அமெரிக்கா உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் உங்களது நாட்டு மக்களது நல்வாழ்விற்கும் எமது இருதரப்பு உறவுகளுக்கும் பங்களிப்புச் செய்வதற்காக நீங்கள் மேற்கொள்ளும் அனைத்து விடயங்களுக்கும் நன்றி.